ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

योगरतो वा भोगरतो वा सङ्गरतो वा सङ्गविहीनः ।
यस्य ब्रह्मणि रमते चित्तं नन्दति नन्दति नन्दत्येव ॥

**योगरतो वा** - அஷ்டாங்க யோகத்தில் விருப்பமுள்ளவனுக வாவது

**भोगरतोवा** - விஷயபோகங்களில் பற்றுதலுள்ளவனுகவாவது

**सङ्गरतोवा** - ஜனங்களுடைய சேர்க்கையை அடைந்தவனுக வாவது

**सङ्गविहीनः**-ஒன்றிலும் பிரியமில்லாமல்விலகினவனுகவாவது

**अस्तु** - இருக்கட்டும்

**यस्य** - எவனுடைய

**चित्तं** - மனமானது

**ब्रह्मणि** - பரம்பொருளில்

**रमते** - விளையாடுகிறதோ

**सः** - அந்த பக்தன்

**नन्दति नन्दति नन्दत्येव** - எப்பொழுதும் அதிகமான ஆனந்தத்தை அடைகிருன் என்பது திண்ணம்.

வெளிப்படையாய்ப்பார்க்கும் ஜனங்களுக்கு எவ்வித வேஷத்துடனிருந்தாலும், தம் உள்ளத்தில் கள்ளமில்லாத திருடமான பகவத்பக்தி எப்பொழுதுமிருக்குமாகில் அவன் ஜீவன்முக்தபதவியிலிருந்து எப்பொழுதும் ஆனந்தத்தை அனுபவிக்கிருன் என்பதை இதிஞல் விளக்கிக்காட்டுகின்ருர்.

ஒருவனுக்கு உண்மையில் சித்தவிருத்தி பாம்பொருளிடத்தில் பற்றுதலடைந்திருக்குமாகில் அவன் யோகாப்பியாஸத்திலமர்ந்திருந்தாலும் விஷயபோகங்களில் இச்சையுடன் கூடியிருந்தாலும், பல ஜனங்களுடனும் அதிகப்பழக்கத்தை விரும்பினுலும் அல்லது ஒருவருடனும் சேர்க்கையையடையாவிட்டாலும், எவ்விதமிருந்தாலும் அவன் ஆனந்தக்கடலில் மூழ்கியிருப்பான் இந்த அபிப்பிராயத்தையே.

क्वचिद्रुदन्त्यच्युतचिन्तया क्वचित् हसन्ति नन्दन्ति वदन्त्यलौकिकाः ।
नृत्यन्ति गायन्त्यनुशीलयन्त्यजं भवन्ति तूष्णीं परमेत्य निर्वृताः ॥

பாமாத்மஸ்வரூபத்தில்லயத்தையடைந்த சித்தத்தை உடைய பக்தர்கள் அதிக ஆனந்தத்தையுடையவர்களாய்க்கொண்டு ஒரு ஸமயம் ரோதனம் செய்வார்கள். ஒருகால் சிரிப்பார்கள். பின்னெரு சமயம் ஸாமான்ய ஜனங்களைப்போல் பேசுவார்கள் முறைமீய காநம், நர்த்தனம், முதலான கார்யங்களைச் செய்வார்களென்று ஸ்ரீமத் பாகவதத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
க்ஷயவருஷ ஐப்பசி-மீ௳ உசஉ

## சிரத்தானந்தர்கூறிய விதவாவிவாகத்திற்கு கண்டனம்.

(ரு0அ-வது பக்கத் தொடர்ச்சி.)

விதவை அல்ல என்பதைத்தான் போதிக்கின்றனவேயன்றி வைதிக மந்திரங்களால் ஸப்தபதி முதலிய கர்மாக்கள் செய்யப்பட்ட முக்கிய விவாகமான கன்னிகைக்குப் பதிவியோகம் ஏற்பட்ட விதவைக்கு மறுமணம் செய்யலாமென்று ஒருவரும் கருதவில்லை. ஆரம்பத்தில் எம்மால் வெளியிடப்பட்ட नष्टे मृते என்கிற பாராசரவசனத்தால் மரித்தபிறகும் விவாகம்செய்யலாமென்று ஏற்படுகிறபடியால் கலியுகத்தில் பாராசரர் அபிப்பிராயப்படி அனுஷ்டிக்கவேண்டுமென்றும் சொல்லியிருப்பதால் எந்த ஸமயத்தில் பர்த்தாமரித்தாலும் மறுபடி ஏன்விவாகம் செய்யக்கூடாதென்று சங்கிப்பதும் சரியல்ல.

அநேகம் ஸ்மிருதி கர்த்தாக்களும் சுருதியும் கூடாதென்று நிஷேதிக்கும் விதவாவிவாகத்தைப் பாராசரர் சொல்லியிருக்கிறார். என்று அவர் ஒருவருடைய வசனத்தைமாத்திரம் கொண்டு அனுஷ்டிப்பது எப்படி உசிதமாகும். மேலும், கலௌ பாராசராஸ்மிருதா:. என்றுயார் சொல்லியிருக்கிறாரென்று கவனித்தால் பாராசரரே சொல்லியிருப்பதாக வைத்தினாததீக்ஷிதவசனத்தால் வெளியாகிறது. அவர் மஹானுயிருந்தாலும் தம்மைப்பற்றித்தாமே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். அதுவும் இதர பல ஸ்மிருதிகளுக்கும் சுருதிக்கும் விரோதமாயிருக்கிறது. அவ்விதமிருக்கும் வசனத்தைஎப்படிப்பிரமாணமாகக்கருதமுடியும். மேலும் கலௌ பாராசரஸ்மிருதா: என்று பொதுவாயிருக்கிறது. மனுஸ்மிருதியைப்பற்றி கவனிக்கும் பக்ஷத்தில் அதுவே எல்லாஸ்மிருதிகளி

லும் சிறந்ததென்றும் அதற்கு விரோதமான ஸ்மிருதி அப்பிர மாணமென்றும்.

यत्पूर्वं मनुना प्रोक्तं धर्मशास्त्रमनुत्तमम् ।
न हि तत्समतिक्रम्य वचनं हितमात्मनः ॥

மனுவினல் யாதொரு தர்மசாஸ்திரம் முன் சொல்லப்பட்டிருக்கின்றனதோ அதுவே மற்றவைகளைக்காட்டிலும் மிகவும் சிறந்தது அதைப்போல் ஜனங்களுக்கு ஹிதத்தைபோதிக்கக்கூடியது வேறொன்றுமில்லை (அங்கிரஸ்)

मन्वर्थविपरीता तु या स्मृतिस्सा न शस्यते ।

பின்னும் மனுஸ்மிருதியின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் கூறும் எந்த ஸ்மிருதியும் பிரமாணமல்லவென்று அங்கிரஸ் சொல்லியிருக்கிறார்.

अपेक्षेत च शास्त्राणि मन्वादीनि द्विजोत्तमः ।

துவிஜசிரேஷ்டனாயிருப்பவன் மனு முதலானவர்களால் எழுதப்பட்ட சாஸ்திரங்களை அறிந்துகொள்ளல் வேண்டும். என்று வியாஸர் ஹாரீதர் இவர்களும் கூறியிருக்கிறார்கள்.

यद्वै किंचमनुरवदत् तद्भेषजमिति । श्रुतिः ॥

மனுவானவர் எதைச்சொல்லியிருக்கிறாரோ அதுதான் சிறந்த ஔஷதம் என்று சுருதியும் ஸ்பஷ்டமாய் வெளியிடுகிறது.

இவ்விதம் சுருதியாலும் ஸ்மிருதிகளாலும் போற்றப்பட்ட மனுவின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் பாராசரர் தர்மவியவஸ்தைசெய்தால் அதை எப்படிப் பிரமாணமாகக் கொள்ளமுடியும். ஆகையால் பாராசரஸ்மிருதியில் விதவாவிவாகத்திற்குப் பிரமாணமிருக்கென்பது தர்மசாஸ்திரங்களுடைய தத்வார்த்தமறியாமல் கூறியதேயாகும்.

இதற்குமேல் பாராசரஸ்மிருதியில் சொல்லப்பட்ட நஷ்டே மிருதே என்கிற வசனத்திற்கு அர்த்தமுண்டா? இல்லையா? என்று சங்கை ஏற்படலாம். அந்த வசத்திற்குப்பொருளில்லை என்று

ஒருவரும் கூறவில்லை. விதவாவிவாகத்திற்கு அந்த வசனம் ஆதாரமாகமாட்டாது. என்றுதான் சொல்லுகிறோம்.

அந்த வசனம் எதற்காக ஏற்பட்டதென்றால் வாக்தானத்திற்கு பிறகு முக்கியமான மந்திரங்களால் ஏற்படக்கூடிய விவாஹம் பூர்த்தியாகிறதற்குமுன் வரனுக்கு தேசாந்திரகமனம், மரணம், சந்யாஸம் முதலான இந்த ஐந்து ஆபத்துக்கள் நேர்ந்துவிட்டால் மறுபடியும் வேறுபதிக்கு அந்தக்கன்னிகையை விவாஹம் செய்து கொடுக்கலாமென்று பராசரர் "நஷ்டேம்ருதே" என்கிற வசனத்தால் அறிவிக்கிறார் இந்தவசனத்தில் 'பதெள' என்றுபராசரர் பிரயோகித்திருப்பதால் வாக்தானத்திற்குப் பிறகு ஏற்படும் கௌணபதியை உத்தேசித்துத்தான்சொல்லியிருப்பதாகத்தெரிய வருகிறது. அவவிதமில்லாமல் இரண்டாவதான முக்கிய பதியை உத்தேசித்துச் சொல்லியிருந்தால் பதெள என்கிற இந்தப் பிரயோகம் தவறேயாகும். பதிசப்தத்திற்குவியாகரணசாஸ்திரப்படி பதிஸ்ஸமாஸ ஏவ என்கிற ஸூத்திரத்தால் ஸமாஸத்தில்தான் மஹீபதெள, பூபதெள என்கிற ரூபம் ஏற்படும். சமாஸமில்லாத கேவலபதி சப்தத்திற்கு மூக்யார்த்தத்தில் பத்யெள என்றுரூபம் ஏற்படுமேயல்லாமல், பதெள என்கிற ரூபம் தவரேயாகும். பதிரிதி ஆக்யாத: என்கிற கௌணார்த்தத்தை அங்கீகரித்தால்தான் இந்தரூபம் சித்திக்கும். ஆகையால் பராசரரும் இவ்விதக்கருத்துக் கொண்டுதான் பதெள என்றுகௌணார்த்தகமானபதிசப்தத்தைப் பிரயோகம் செய்திருக்கிறார். இந்த வசனத்திற்கு இவ்வித அர்த்தத்தை அங்கீகரித்தால்தான் கீழ்காட்டிய சுருதிக்கும் மனுமுதலிய ஸ்மிருதிவசனங்களுக்கும் விரோதமில்லாமலிருக்கும். ஆகையால் "நஷ்டேம்ருதே" என்கிற வசனத்தால் கௌணபதியை உத்தேசித்துத்தான் பராசரர் சொல்லியிருக்கிறார் என்று நிச்சயமாய்த்தெரிகின்றது. இந்த வசனத்தை விதவாவிவாஹத்திற்குப் பிரமாணமாகக் காட்டுவது ஒருகாலும் பொருந்தாதது என்பது திண்ணம்.

உபபத்திராதிபர்.

# இந்தியாவின் சிறப்பு.

(௫௧௯-பக்கத் தொடர்ச்சி)

## இமயமலை.

இது கீழ்மேல்நீளமுள்ளது. இது தேவதாஸ்வரூபமானது. இதை தரிசனம் செய்தாலே ஸமஸ்தபாபமும் விலகும். ஆதல்பற்றியே ஸ்ரீ காளிதாஸன் பகவானது சரித்திரத்தைச் சொல்வதால் தன்னையும் படிப்பதால் பாலர்களையும் கேட்பதால் பக்தர்களையும் பாவனம் செய்யுமென்று நிச்சயம் கொண்டு குமாரஸம்பவமென்ற கிரந்தத்தின் ஆரம்பத்திலேயே மங்களசுலோகமாக—

अस्त्युत्तरस्यां दिशि देवतात्मा हिमालयो नाम नगाधिराजः ।
पूर्वापरौ तोयनिधीवगाह्य स्थितः पृथिव्या इव मानदण्डः ॥

வடதிசையில் கீழ்மேல் ஸமுத்திரத்தை வியாபித்துக்கொண்டு பூமிக்கு அளவுகோல் நீட்டியதுபோல் நிற்கும் தேவதாரூபமான இமாலயமென்றோர் பர்வதராஜன் இருக்கிறார் என்றார். இம்மஹா மலையின் உயரத்தையும் சுற்றளவையும் மனிதன் ஒருவனும் கண்டதில்லை. இதன் மகிமையை நாம் புராணமூலமாய்த் தான் அறியலாம். குமாரஸம்பவத்தில் காளிதாஸன் அதன் ஸ்வரூபத்தை வர்ணிப்பது மிகவும் பொருத்தமுடையது.

जानाते यन्नचन्द्रार्कौ जानते यन्नयोगिनः ।
जानीते यन्नभर्गोपि तज्जानाति कविः स्वयम् ॥

ஸர்வலோகவ்யாபகர்களான சந்திர்சூர்யர்களாலும் ஞானதிருஷ்டி-வலுவடைந்த யோகிகளாலும் ஸர்வநியந்தாவான பரமசிவனாலும் அறியக்கூடாததைக் கவி அறிந்துவிடுகிறான் என்ற நியாயப்படி கவி சொல்வது உண்மையென்று நாம் கொண்டாடுவோம். அத்தகைய மகிமை பொருந்திய இமயமலையை ஏறிப் பார்த்ததாகவும் அதில் அது இருக்கிறது இது இருக்கிறது என்று சொல்வதையும் நாம் அத்புதமாய் இருப்பதையொட்டி ஒருவாறு தலைசாய்த்தாலும் சிகரத்திற்கு இன்னும் கொஞ்சதூரம்தான் இருக்கிறதென்று

சொல்லும் வார்த்தையை மட்டிலும் ஆஸ்திகன் ஒருவனும் ஒப்ப மாட்டான். வீணில் வளர்ப்பானேன். சிகரத்திற்கு எவ்வளவோ கீழ்ப்பிரதேசத்திலிருக்கும் அளகாபுரி என்ற குபேரபட்டணத் திற்கும் கீழ் வாழைத்தோப்பில் யோகநித்திரை செய்யும் ஆஞ்ச னேயருடன் ஸம்பாஷணைசெய்துவிட்டுத் திரும்பிய பீமஸேன னே நம்மிடம் வந்து இன்னும் சற்று தூரத்தில்தான் சிகரமிருக் கிறதென்று சொன்னாலும் நம்பமுடியாது. அவ்விதமிருக்க மற் றவர்களின் கதை நமக்கு எதற்கு இருந்தாலும் இதை இக்காலத் திய பலர் நம்பமாட்டார்களாதலால் அவர்களின் மனக் களிப்பிற் காக இப்போது சில மேதாவிகள் சொல்லக்கூடிய அளவு முதலிய வற்றையும் கொஞ்சம் கூறுகிறேன்.

இம்மலையில் 23000 அடி உயரமுள்ள சிகரங்கள் 45 இருக் கின்றனவாம். 20000 அடி உயரமுள்ள சிகரங்கள் நூற்றுக்கண க்குக்குமேல் இருக்கின்றனவாம். இது உண்மையாகலாம். குரு டன் யானை கண்டதுபோல் இதில் எதாவது சிகரம் ஒன்றிரண் டைக்கண்டுவிட்டு மலையின்சிகரத்தைக்கண்டேனென்று சொல்லிக் கொள்ளலாம். இதில் மிக உயர்ந்தசிகரம் 29000 அடிதானும். இவ் விதம் உயரமுள்ள பர்வதம் உலகில் வேறொன்றும் கிடையாதாம். இம்மலையின் தென்பாகத்தில் 16200 அடிக்குமேல் பனிக்கட்டி மலையாய் உரைந்திருக்கிறதாம். வடபாகத்தில் 17400 அடிக்கு மேல் உரைந்திருக்கும் கட்டி கல்போல் வெட்டியெடுக்கத்தக்கது. அவ்விதம் பனிக்கல்லாய் ஓரிடத்தில் 25-மைல் நீளத்திற்கும் 3-மைல் விஸ்தாரத்திற்கும் இருக்கிறது. இது வெயிற்காலத்தில்உரு நதியில் குறையாத ஜலமாய்ப் பிரவாகமாய் வருகிறது. இவ்வி தம் பனிக்கட்டி எப்போதும் இருப்பதாலேயே இதற்கு ஹிமாலயம் என்று காரணப்பெயர் எற்பட்டது. மலைகளெல்லா வற்றிலும் பலவகையாலும் மேன்மைப்பட்டதனால் பர்வதராஜன் என்றும் பெயர். இனி அடுத்தஸமயம் மற்ற பர்வதங்களையும் நதிகளையும் தேசங்களையும்பற்றிக் கூறி ஸர்வவிதத்திலும் இந்தியா மேன்மைபெற்றதுதானென்பதை நிரூபிப்பாம்.

நாம் முற்கூறியபடி இமயமலைக்கு இரண்டாவதான மலையை க்கூறுகின்றேன். கார்த்ஸ்வாரகம் என்றோர் மலை இமயமலைக்கு அடுத்ததாய்ச்சொல்லலாம். அதை இப்போது காரகோா (Ka-

rakora) என்றுகூறுகின்றனர். இம்மலைகாச்மீரதேசத்திற்குச்சற்று வடபுரத்திலிருக்கிறது. இப்பெயரின் அர்த்தம் ஸ்வர்ணத்திற்கு இருப்பிடம் என்பது. கார்த்தஸ்வர என்ற பதம்தான் காரகோர என்று மாறியிருக்கிறது. இப்போதும் இம்மலைக்குத் தென்புறமாகச் சமீபத்தில் தங்கம் கிடைக்கிறதாம். அப்படிக்கிடைக்கும் இடத்தை பால்டி Bolty அல்லது Little Tibet என்றும் கூறுகின்றனர்.

இம்மலைக்கும் அனேக கொடிமுடிகள் உண்டாம். அவைகளுள் முக்கியமான சிகரம் இமயமலையின் பிரதான சிகரத்திற்குச் சற்று தணிந்தது. Polar region என்கிற த்ருவதேசத்தைத் தவிர அடுத்தபடி இங்குதான்பனி அதிகமாம். இம்மலையையும்முழுமையும் சுற்றிப்பார்த்தவர்களில்லையாம்.

மூன்றாவது ஸுலைமானீ. இதை Suliman) என்று வியவகரிக்கின்றனர். இது ஸிந்துநதியின் மேல்புறக் கரையிலிருக்கிறது. இதற்கு வடபுறமாய் பஞ்சநதமென்னும் பஞ்சாபில் ருமண்வான் என்றோர் மலை உண்டு. இதை Salt Range என்பார்கள். இந்த மலையிலிருந்து இப்போதும் பாறை பாறையாய் உப்பைப்பெயர்த்தெடுக்கிறார்கள். இதைத்தான் கல் உப்பு என்றும் இந்துப்பு என்றும் ஜனங்கள் வழங்குகின்றனர். இந்த உப்பை விசேஷமாய் முற்காலத்தில் நம் முன்னோர்கள் சாப்பாட்டில் உபயோகித்திருப்பதாய்த்தெரிகிறது. ஆனால் ஸமுத்திரத்தில் எடுக்கும் உப்பும் அக்காலத்திலிருந்தாலும் ஸமுத்திரத்திலிருந்து வெகுதூரம் இருக்கும் தேசங்களில் அது கிடைக்காததால் இக்கல்லுப்பை அவ்விடங்களில் உபயோகித்ததாய்த் தெரிகிறது. ஆதல்பற்றியே தர்மசாஸ்திரத்தில்,

सैन्धवं लवणं चैव तथा मानससम्भवम् ।
पवित्रे परमे ह्येते प्रत्यक्षमपि नित्यशः ॥

ஸமுத்திரத்தில் உண்டாகும் உப்பும் மானஸஸரஸ்ஸில் உண்டாகும் உப்பும் மிகவும் சுத்தம் உள்ளவை. ஆதலால் அவைகளைப் பிரத்தியக்ஷமாய் உபயோகித்துக்கொள்ளலாம் என்றார். இது கொண்டே இப்போதும் ஆசாரமுள்ள அனேகர்களது வீட்டில்

போஜனத்தில் உப்பை விரும்பினல் அதை நோய்ப் பரிமாறுவ தில்லை. பிரகிருதமில்லாத இது வேண்டாம் மேலே செல்வாம்.

அற்புதபர்வதமென்பது ஒன்று. (Aravally Mountains) இது ஸிந்துவுக்கும் கங்கைக்கும் நடுவிலிருக்கிறது. விந்தியபர்வ தத்தின் மேல்கோடியிலிருந்து ஆஜ்மீரம் (Ajmire) என்ற ஊரைக் கடந்து இந்திரப்ரஸ்தம் என்கிற டில்லியைத்தாண்டி வெகுதூரம் வியாபித்திருக்கிறது. இதில் ஆரோக்கியஸ்தானம் இருக்கிறது. இதை ஆபூ (Abu) என்பார்கள். இங்கு ஜைனர்களது தேவால யம் அதிகமாய் இருக்கிறது.

விந்தியபர்வதம் இம்மலையைப்பற்றி விசேஷமாய்க் கூறத் தேவை இல்லை. நமது தர்மசாஸ்திரங்களிலும் இதர மதஸ்தர்க ளது புக்தகங்களிலும் இம்மலையைத் தெற்கு எல்லையாய்க் கூறு கின்றனர். தர்மசாஸ்திரங்களில் அனுஷ்டானபேதங்கள் விந்தி யத்திற்குத் தெற்கிலும் வடக்கிலும் கற்பிக்கின்றனர். போதா யனரும்.

**पञ्च विप्रतिपत्तिर्दक्षिणतस्तथोत्तरतश्च ।**

தெற்கில் சிலவிருத்தமான ஐந்து அனுஷ்டானங்கள் அப்படியே வடக்கிலும் என்கிறர் ஆகவே ஸாமான்யமாய்த்தெற்கு வடக்கு என்பதற்கு ஆதாரம் இம்மலைதான். இதுகூர்ஜாதேசத்தின் மறுதே சத்தில் ஆரம்பித்து கங்காநதியின் ஸமீபம் வரையிலிருக்கிறது. இது 1200 மைல் நீளம் உள்ளதென்றும் 2500 அடி உயரம் உள் ளதென்றும் கூறுகின்றனர் இதில் அடர்ந்து நெருங்கிய காடுமிக வதிகம். பல மிருகங்கள் வஸிக்க செளகர்யம் விசேஷமாய்ஏற்பட் டிருக்கிறது. இதன் தாழ்வரையிற் பல விடங்களில் மணல்களே கட்டிசேர்ந்து கற்பாரைகளாய் இருக்கின்றன. கூழாங்கல்மயமா யும் அநேகஇடம் இருக்கிறது. அவ்விடங்களில் மரம் செடிகொடி களே உண்டாகிறதில்லை.

ருக்ஷபர்வதம் இது விந்தியபர்வதத்திற்குத் தெற்கில் 100 மைல் நீளமுள்ளது இதன் சிகரம் 200 அடி உயரமுள்ளதுதான் இது ராமாயணத்திலும் பிரஸித்தியுள்ளது இதை விந்தியமலையின் அடிவாரம் என்றும் சொல்வார்கள். மேல்வரிசை நாட்டுமலை. (Western Ghats) என்பார்கள் இதுமேல் சமுத்திரக்கரையில்

தொடர்ச்சியாய் இருக்கிறதென்றாலும் ஓரிடத்தில் மட்டும் 50 மைல் விட்டுப்பிறகு மொத்தத்தில் 860 மைல் நீளமுள்ளதாய் இருக்கிறது. இதன் உயரம் தெற்கேபோகப்போக அதிகம். முடிவான உயரம் 7000 அடி என்கின்றனர். இத்தொடர்ச்சியைத்தான் ஸஹ்யம், நீலகிரி, மலயபர்வதம் மகேந்திரபர்வதம் என்றெல்லாம் குறிப்பிடுகின்றனர். இம்மலையே சுகஸ்தானமென்றாலும் நீலகிரியையும் தெற்கில் ஸஹ்யபர்வதத்தையும் விசேஷசுகஸ்தானமாய்க் கருதுகின்றனர். இதில் அநேக மருந்துச்செடி கொடிகளும் சோலைகளும் இருக்கின்றன. இம்மலையில் அநேக ஸித்தர்கள் வாஸம் செய்ததாகவும் இப்போதும் வஸிப்பதாயுமே அநேகர் கூறுகின்றனர். இம்மலைதான் அகஸ்தியருக்கு முக்கியமான வாஸஸ்தானம். இங்கிருந்துகொண்டுதான் குமாரக்கடவுளின் அனுக்கிரகம்பெற்று திராவிட ஸூத்திரம் இயற்றினர். தமிழ்வைத்தியத்திற்கு மூலகர்த்தாவான இவரும் 18 ஸித்தர்களும் இம்மலையில்தான் ஸமஸ்த மூலிகைகளும் உத்பத்தியாகின்றனவென்று கொண்டு இங்கிருந்துகொண்டே மூலிகைகளைச் சோதித்து வைத்திய சாஸ்திரமியற்றியதாயும் கூறுகின்றனர். இம்மலையின் காற்றைத்தான் கவிகள் மலயமாருதம் என்று கொண்டாடினர். மலயமாருதம் என்றதென்றல் காற்றுப்பட்டால் இப்போதும் சரீரத்திற்கு உடனே ஆரோக்கியத்தை அனுபவிப்பது பிரத்யக்ஷம். வடகோடிக்குஹிமயமலையில்உண்டாகும் கங்கையும்தென் கோடிக்குத்தாமிரபர்ணியும் பரமஆரோக்யமுள்ளது. இம்மலையில்தான் தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் ஆனந்தத்தையும் அலங்காரத்தையும் உல்லாஸத்தையும் சந்தோஷத்தையும் லக்ஷ்மியையும் கொடுக்கக்கூடிய சந்தனமரங்கள் அழகாய் வளர்கின்றன. இம்மாதிரி கிழக்குத்தொடர்ச்சிமலையும் இருக்கிறது. ஆயினும் அதிலுள்ள குணங்கள் ஒருவிதத்திலும் அமையப்பெற்றதில்லை. இன்னும் மகேந்திரமாலி என்றும் தர்தூரம் என்றும் இன்னும் பல பர்வதங்களின் பெயர்கள் கவிகளின் வாக்கிலிருந்து உண்டாயிருக்கின்றன. அவை எல்லாம் இத்தொடர் மலையைச் சார்ந்தவைகள் தானென்று விசேஷமாய்க் கூறவேண்டாமென்று விடுவோம்.

இனி ஹிந்துகுஷ் என்ற ஒரு மலையைக் கூறுகின்றனர். இது நமது பாரதகண்டத்திற்கு வெளியிலிருக்கிறது. இதற்குத்தான்

நிஷதம் என்று பெயரெனச்சிலர் கூறுகின்றனர். இதன் பக்கத்தில் தான் ஆரியர்கள் பாதகண்டத்தில் பிரவேசிப்பதற்குமுன் வஸித்திருந்தனராம். ஹிந்துவென்பவர்கள் வஸித்ததனுல்தான் ஹிந்து கோசம் என்று பெயர் இருந்து ஹிந்துகுஷ் என்று இப்போது கூறப்படுகிறதாம். இந்த அத்தைப்பாட்டிக் கதைக்கு நாம் முன்னமே விடைகூறிவிட்டோம். ஸிந்துவென்பதுஹிந்துவென்ருனது போல் ஸிந்துகோசம்தான் ஹிந்துகோசமென்ருயிற்றென்று சில மேதாவிகளின் கூற்று.

ஆகவே முக்கியமாய் நம்பாதகண்டத்தில் மலைகள் இவ்வளவுதான் இன்னும் கணக்கில்லாத மலைகள் இருந்தபோதிலும் அவைகளைப்பற்றிக் கூறவேண்டாம். இனி கைலாஸம் என்றும் மேருவென்றும் புராணப்பிரஸித்தமாய்க்கூறப்படும் மலைகளின் வர்ணனையைப்பற்றி ாாம் கூறவேண்டாம். ஆஸ்திகர் யாவரும் புராணப்பிரஸித்தமாய்க் கேள்விப்பட்டிருப்பதாலும் எம்பெருமாள் திருக்கோயிலானது பற்றியும் பக்தியால் மட்டும் அறியத்தக்கது.

ஆகவே ஆர்யர்களே! இவ்வளவுதூரம் சொல்லவந்ததெதற்கென்பதை மட்டிலும் கவனிக்கவேண்டும். நம் தேசம் ஈசனின் அந்தரங்கக்கிருகம் என்றும் பிரத்யக்ஷமாய் விளையாடும் கூடமென்றும் புண்யசாலிகள் இங்குதான் வஸிப்பார்களென்றும் இங்கு என்ன கஷ்டம் வந்தாலும் பகவானே வந்துதீர்ப்பாரென்றும் வேண்டுமென்றே அகண்டபூமண்டலத்தில்இக்கண்டத்தைப்பக்ஷத்துடன் சிருஷ்டித்திருக்கிருரென்றும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணப்படுகிறது. இனி ஈசன் இத்தேசத்தில் சிருஷ்டித்து ஜீவராசிகள் சுகத்தை அடைந்து கடைசியில் புண்ய லோகங்களையும் கொடுக்குமாறு அநேக புண்யநதிகளையும் சிருஷ்டித்திருக்கிருரென்பதை அடுத்த ஸமயத்தில் வெளியிடுவோம். சுபம்!

M. N. சுப்ரமணிய சாஸ்திரிகள்

---

# சிவபூஜையின் மகிமை.

## கூர்மத்தின் வரலாறு.

சிவபூஜை செய்தலினால் பேறடைந்தவர் அநேகர். தெய்வ லோகத்தில் மானஸஸரஸில பூர்வம் 60கல்பகாலம்வரையில்ஆமை என்னும் ஜலசரம்வசித்திருந்ததாகச்சொல்லப்படுகிறது.

இந்த ஆமை, இந்த ஜன்மம் அடைவதற்கு முன்னால் சாண்டில்யன் என்னும் பெயர்கொண்ட பிராமண ஜன்மத்தை வகித்திருந்தது. இந்த ஜன்மாவில் இவன் குழந்தைப்பருவம் தொட்டே ஈசுவரபக்தி மிகுதியும்கொண்டு அதற்கு ஏத்தாற்போல காரியங்கள்செய்து வாழ்ந்துவந்தான். அக்குழந்தைப் பருவத்தில் சாண்டிலியன் தன்னோடொத்த வயதினருடன்சேர்ந்து தெருவில் புழுதியளைந்து விளையாடுவது வழக்கம். மழைபெய்திருக்கும் காலங்களில் சாண்டிலியன் என்னும் பிராமணச்சிறுவன், தன்னோடொத்த வயதினரைச் சேர்த்துக்கொண்டு பலதரம் தெருவில் ஈரமண்ணில் விளையாடுதல் கடைப்பிடித்தான. அப்போது ஈரமண்ணினால் தெருவில் பலதரம் கோயில்கள் கட்டினான். அவற்றில் ஸப்தப்பிராகாரங்கள் ஏற்படுத்துவான். அவற்றில் ஒவ்வொன்றிலும் ஆதித்தியன் அம்பிகை, விஷ்ணு, கணநாதம், மஹேச்வரன் முதலிய பாரிஷதகணங்களைஏற்படுத்துவான். அவற்றின்மத்தியில்மழையில் நன்றாக நனைந்திருந்த கருங்கல்லொன்றினை எடுத்து வைத்து லிங்கமாக ஸ்தாபிப்பான். இன்னும் அக்கோயிலைப்பற்றி விளையாட்டாய் மாவிலைகளாலும் மகரதோரணங்களாலும் அலங்கரிப்பான் தன்னோடொத்த பிள்ளைகளையும் தான் செய்வதுபோல் செய்யச்சொல்லி அக்கோயிலிலுள்ள சிவலிங்கத்திற்கும் பாரிஷதகணங்களுக்கும் முறைப்படி புஷ்பங்களால் அர்ச்சனைகள்செய்து தன்னோடொத்த பிள்ளைகளைப் பாடச்செய்து தானும் உடன் ஈசுவரன் மகிமைகளைக்குறித்து இனிமையான குரலுடன் உள்ளங்கனிந்து பாடுவான். பாடலுக்கேற்ப பிள்ளைகளையும் குதிக்கச்செய்துந் தானும் நர்த்தனம் செய்வான். இப்படிச் சிலநாள்கள் இவன் சிவபூஜை செய்யும் காரியத்தையே கடைப்பிடித்துச் செய்து வந்தான்.

அவிவேகத்தினுல்செய்த இப்பூஜைக்கு வியந்து ஈசுவரன் இச்சாண்டிலியன் என்னும் பிராமணனுக்கு மறுபடியும் பிராமண ஜன்மாவாகவே மறுஜன்மாவையும் கொடுத்தான். மறுஜன்மாவில் ஸத்பிராமணனுகப்பிறந்த இவனுக்குப் பூர்வஜன்மவாஸனை விடவில்லை. ஆகவே இவன் இந்த ஜன்மாவிலும் சிவபூஜைசெய்யக் கடைப்பிடித்தான். பூர்வஜன்மவாஸனு விசேஷத்தினுல் இவன் சிவபூஜைசெய்வது மேற்கொண்டுசிவதீக்ஷையை விதிப்படிசெய்து கொண்டான். அதன்மேல் கருங்கல்லினுல் ஆலயமமைத்து சிவலிங்க சிலா விக்ரஹமொன்றினை அதில் ஸ்தாபித்தான். திரிகால ஸ்நானம்செய்வது என்னும் விஷயத்தை நியமமாகக்கொண்டான், இன்னும் பிக்ஷையெடுத்து ஆகாரமுண்ணுவதையே யொருநியதியாகக்கொண்டு கடைப்பிடித்தான். இப்படி இந்த ஜன்மா சிவபூஜைசெய்து கழிந்தது. இவ்வாறு சிவபூஜையை விரதமாகக் கொண்டு நடத்தினபடியால் அடுத்தஜன்மாவில் இந்தப்பிராமணன் பிரதிஷ்டானம் என்னும் நகாத்தில் விசுவஜித்து என்னும் அரசனுக ஜனித்தான்.

இந்த அரசன் முன்ஜன்மாவில்செய்த சிவபூஜையின் பெருமையினுல் இவனைவிட்டு முன்ஜன்மவாசனைபோகவேயில்லை. ஆகவே இவ்வாசகுமாரன் இராஜாங்க போகவிஷயத்தைச்செல்வுளாளமாய்ச்செய்து கணக்கு வழக்கில்லாத கோயில்களைக்கட்டி எண்ணிறந்த இலிங்கங்களை அக்கோயில்களில் பிரதிஷ்டை செய்தான். இவ்வாறு ஈசுவரபக்தி மிக்குச்செய்த காரியங்களுக்குப் பார்வதிநாதன் சந்தோஷித்து இவன்முன் விருஷபாரூடராய்ப்பிரத்தியட்சமானுர். பிரத்தியட்சமான ஈசுவரனை விசுவஜித் என்னுமரசன்.

தேவர் கோவறியாத தேவதேவன்
செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை
மூவர் கோனுய் நின்றமுதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும்பாகத் தெந்தை
யாவர் கோனெம்மையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்குங்குடியல்லோம் யாதுமஞ்சோம்
மேவினோ மவனடியாரடியாரோடு மேன்மேலு
ங்குடைந் தாடியாடுவோமே. (தொடரும்)

பண்டித V. சுப்பிரமணிய அய்யர்,

## இரண்டாம் ஆவரணம்.

### * வெள்ளக்கம்பர் கள்ளக்கம்பர் நல்லகம்பர்.

சிவபெருமான் கச்சிமயானத்தின்கண் சைவவேள்வி செய்து முடித்தபின்னர் சிவசக்தி லலிதாதேவி என்னும் திருநாமம் கொண்டு வெளிப்பட்டு யாவும் படைக்கத்தொடங்கியபொழுது அவரது முக்கண்ணினும் தோன்றிய மும்மூர்த்திகளுள் பிரமனால் பூஜிக்கப்பட்டவர் 'வெள்ளக்கம்பர்' திருமாலால் பூஜிக்கப்பட்டவர் 'கள்ளக்கம்பர்' உருத்திரரால் பூஜிக்கப்பட்டவர் 'நல்லகம்பர்' இம்மூவருள் ஏகாம்பரநாதருக்கு வலப்பக்கத்தில் வெள்ளக்கம்பர் இடப்பக்கத்தில் கள்ளக்கம்பர் ஈசானத்தில் நல்லகம்பர்.

தென்பக்கத்தில்—

### அகத்தீச்வரர்.

விந்தியமலையின் இறுமாப்பையடக்கத் தேவர்கள் வேண்டியவாறு காசியில் வசித்திருந்த அகத்தியமுனிவர் காஞ்சிக்கு வந்தபோது அக்காஞ்சி சான்றோரையுடைத்தாயிருக்கும் சிறப்பை நாடி இவ்விடத்தில் நாம் தேவர்கள் சொல்லியவண்ணம் வெளிப்படுத்தவெண்ணியிருக்கும் இனிமையுடைத்தாகிய தமிழை வெளியாக்கல்வேண்டும் என்று பூஜித்தனர்.

ஷை மேற்பக்கத்தில்—

### அஷ்டோத்தரசதலிங்கம் (108)

† உமாதேவியார் பத்ரிகாச்ரமத்தில் சிவாக்ஞையால் யோகதண்டம் முதலியவைகளோடு சிவார்ச்சனைக்காகத் தாம் பெற்று வந்த மணல் காஞ்சிக்கு வந்தபோது இலிங்கரூபமானவைகள். இந்த இலிங்கங்களுக்கு நிருருதிதிக்கிலுள்ள விநாயகக்கடவுளும் வாயுதிக்கிலுள்ள முருகக்கடவுளும் காமாக்ஷிதேவியாரால் ஏகாம்பரநாதரைப் பூஜிப்பதற்கு முன்னாகப் பூஜிக்கப்பட்டவர்கள்.

---

* சுவச்சயேகாம்பரநாதர், மோகனஏகாம்பரநாதர், பத்ரஏகாம்பரநாதர் இந்நாமங்கள் வடமொழியிற் கண்டது.

† இந்தச் சரித்திரம் காஞ்சிமஹிமையில் 8-வது அத்தியாயம் ரசாலெசப்பிராபாவத்திலுள்ளது.

ஷ வடபக்கத்தில்—

## மார்க்கண்டேச்வரர்.

மார்க்கண்டேய முனிவர் ஓர் காலத்தில் ஜலப்பிரளயம்வந்த போது அதில் நீந்திவந்து ஓர் புகலிடங்காணுது மனம் வருந்திப் பார்க்கக் காஞ்சியிலுள்ள வேதஸ்வரூபமாகிய மா விருக்ஷம் வளர்ந்து ஜலப்பிரளயத்தின்மேல் தோன்றிற்று. அதுகண்டு அதனைப் பிடித்துக்கொண்டு காஞ்சியிலிழிந்து ஆம்பரமாகிய யாவையும் ஆம்பரநாதரையும் கண்டு களித்துப் பின்னர்த் தமது பெயரால் பூஜித்தனர்.

## மத்தளமாதவேச்வரர்.

மாதவராகிய திருமால் தில்லையில் திருநடனங்கண்ட காலத்தில் நந்தியாதியர்போல் தானும் மத்தளம் முழக்கவேண்டும் என்று நடராஜப்பெருமானை வேண்ட அவர் "நீ வேண்டிய இதனைப் பெறவேண்டுவையாயின் காஞ்சியின்கண் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து இவ்வரம்பெற்று இங்குவந்து மத்தளம் முழக்குவாய் என்று அருள அவ்வண்ணமே வந்து பூஜித்தனர்.

கீழ்ப்பக்கத்தில்—

## நிலாத்திங்கட்டுண்ட பெருமாள்.

இவர் பாற்கடலில் தோன்றிய விஷஜ்வாலையினுல் சரீரம் தபிக்கப் பெற்றகாலத்தில் சிவாக்ஞையால் "நீ என் முன் இங்கிருக்கப் பெறுவையாயின் எனது ஜடையிலுள்ள சந்திரனுடைய நிலவானது உன்மேற்படும். அதுபடுமானுல் இந்த வெப்பம் நீங்கும்" என்றருள அவ்வண்ணமே நின்றனர். இவ்விடம் திருமாலுக்குரிய திருப்பதிகளில் ஒன்று. இந்த முதலாம் ஆவரணத்தில் வடக்கில் கீர்த்திமதி என்னும் தீர்த்தம். இது ஏகாம்பரநாதருடைய பூஜைக்குரியது. அக்னிதிக்கில் மடைப்பள்ளியில் உமாபத்திரை என்னும் தீர்த்தம். இது காமாக்ஷி தேவியார் ஸ்நானம் செய்தற்குரியது. இவ்விரண்டும் கிணறுகள்.

## மூன்றும் ஆவரணம்.

மேற்பக்கம்,—நிருதிமூலையில் 108 இலிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம், வாயுமூலையில் 1000 இலிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம் இதன் மத்தியில் மணக்கோல நாதராகிய ஏகாம்பரநாதரும், மாவிருக்ஷமும், மாவடிகந்தப்பரும், ஏலவார் குழலியாரும் உள்ளார்.

கந்தப்பர் மாவடியின்கண் வேதஸ்வரூபமாகிய மாமரத்தின்கண் சித்தாந்தச் சுவையோடுகூடிப் பழுத்திருக்கும் வேதாந்தக் கனியை உண்பதற்கு வீற்றிருக்கின்றார். ‡ ஏலவார் குழலியார் கங்கையே அத்திருவுருவமாக வந்தவர்.

வடக்குப் பக்கம்—

### பிரளயபந்தினி.

இந்தச் சக்தி கம்பாநதியானது சிவபெருமானுருடைய ஆணையால் வெள்ளமாய்வர அதனை ஏகாம்பரநாதரைப்பூஜிக்கின்ற காமாக்ஷிதேவியார் கண்டு தனது சேடியருள் ஒரு சக்தியையழைத்து "இவ்வெள்ளத்தைத் தடுப்பாய்" என்று கட்டளையிட அந்தச் சக்தி தான் வைத்திருந்த விச்வபக்ஷணம் என்னும் கபாலத்தில் அவ்வெள்ளத்தை அடக்கினவள்.

நடராஜமூர்த்தி தில்லையின்கண் திருமாலுக்கு மத்தளம் முழக்கக் காஞ்சிக்குப்போகும்படி அருள்செய்தபொழுது திருமாலைப் பார்த்து "நாம் இத்தில்லையில் சித்ஸபையை மாத்திரம் சிதாகாசமாகக்கொண்டு நடனம் செய்கின்றோம். காஞ்சியில் அவ்வெல்லை முற்றும் பரவெளியாகக்கொண்டு ரக்ஷாதாண்டவம் செய்கின்றோம். அந்தக் காக்ஷியை நீ அங்கு காணலாம்" என்று கட்டளையிட்டவண்ணம் ரக்ஷாதாண்டவதரிசனம் கொடுத்தருளினவர்.

### கருந்தடங்கண்ணி.

இவ்வம்மை காமாக்ஷிதேவி கௌரியானபோது அவாது திருமேனியினின்று நீங்கிய கரியகோசம்.

---

‡ இது காஞ்சீமஹிமையில் காண்க.

## நான்காம் ஆவரணம்.

துவஜஸ்தம்பஸ்தானத்தில்—

### கச்சிமயானர்.

பூர்வத்தில் பந்தகாசுரன் என்னும் ஓரசுரன் திருமால்முதலிய யாவருள்ளும் கலந்து அவர்களுடைய வீரியங்களையுண்டுவரும் பொழுது அதனையறிந்துகொள்ளாத திருமால் முதலியோர் கைலாஸத்தில் சென்று பெருமானைப் பணிந்து “நாங்கள் இறக்க வேண்டிய காலம் வருவதற்கு முன்னரே இறந்துபோகும்படியான கதி எங்கட்கு நேர்ந்திருக்கின்றது. காரணம் அறியோம் என்று இரந்துகூறப் பெருமான் காரணங்கூறி யாவரையும் காஞ்சியில் சைவயாகத்துக்குரிய திரவியங்களாக வரச்செய்து தாம் உமாதேவியாருடன் யாககர்த்தாவாக எழுந்தருளியிருந்து யாகாக்னியை உண்டாக்கி அதில் யாகத்திரவியரூபமாயிருக்கின்ற தேவர்களையெல்லாம் இட்டுச் சுட்டெரித்தனர். எரிக்கவே அவருள் ளிருந்த பந்தகாசுரன் நாசமடைந்தனன். உலகமும் நாசமுற்றது அதனால் அவ்விடம் மயானமாயிற்று. அக்கச்சிமயானத்தில் யாகாக்னியாய் ஜ்வலித்துக்கொண்டிருந்த சிவபெருமான் இலிங்க ரூபமாயினர். அக்காரணத்தால் கச்சிமயானேச்வரர் எனப்பெயர் பெற்றனர்.

வாலீச்வரர். (கச்சிமயானத்துக்குக் கீழ்பால்) தேவேந்திரன் மகனாகிய வாலி தன்னைப்போரில் யாவரெதிர்ப்பினும் அவரது பலத்தில் தனக்குப் பாதியும், தோல்வியில்லாத வெற்றியும் வர வேண்டும் என்று பூஜித்தனன். அச்சுயம்புமூர்த்தி வாலியின் வால் தழும்பும் பெற்றுள்ளார்.

பைரவராலயம். (வாலீச்சரத்துக்குக் கீழ்பால்)

சிவகங்கை. சிவபெருமானுன் சைவயாகம் செய்யத்தொடங்கியபொழுது தமது வலக்கை விரல் நகங்களால் பறித்து ஓர் குண்டமாக்கி அதில் கங்கைபோல் வாமதேவமூர்த்தியை நெய்யாகப்பூரிக்கப்பெற்றதனுல் சிவகங்கை எனப்பெயர்பெற்றது.

தென்பக்கத்தில்—

### விஷ்ணுவேச்வரர் ஸரஸ்வதி மண்டபம்.

திருப்பாற்கடலிலிருந்து திருமால் தன் மனையாட்டி முதலாயினருடன் தில்லையில் வந்து திருநடனம்காணத் தவம்புரியுங்கால்